22.09.2025

OS. No.372/2024

**வா.சா.1 –** திருமதி.ஹெட்ஸி குளோரி, க/பெ.திரு.பால் ஆரோக்கிய ராஜ்

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை (2 ம் பிரதிவாதி தரப்பில்):–**

நான் இந்த வழக்கில் கண்ட முதல் பிரதிவாதியுடன் செய்து கொண்ட கிரைய ஒப்பந்தத்தில் கண்ட சொத்தானது நஞ்சை நிலம் ஆகும். அது மொத்தம் 62 சென்ட் உடையது ஆகும். நான் அதில் 31 சென்ட் நிலத்தைப் பொறுத்து ஒப்பந்தம் போட்டுக் கொண்டேன். நான் முன்பணமாக ரூபாய் பத்து லட்சத்து 50 ஆயிரம் கொடுத்தேன். நான் அந்த பணத்தை எந்தெந்த தேதிகளில் எவ்வளவு ரூபாய் கொடுத்தேன் என்பதை வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பிலும் தாக்கல் செய்த வழக்குரையிலும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தில் ஒரு மாத காலத்திற்குள் கிரையம் செய்து கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்றால் சரிதான். ஒப்பந்தம் பிறப்பிப்பதற்கு முன்பாக நான் தாவா சொத்தை நேரில் சென்று பார்வையிட்டேன். அந்த சொத்தில் நான் பார்வையிட்ட காலத்தில் என் கணவர் பால் ஆரோக்கியராஜ் தான் விவசாயம் செய்து வந்தார். எனது கணவர் தாவா சொத்தை முதல் பிரதிவாதியிடம் இருந்து குத்தகைக்கு எடுத்து சாகுபடி செய்து வந்தார். அந்த குத்தகை தொடர்பான விபரங்களை முதல் பிரதிவாதியிடம் கேட்டபோது என் கணவர் தான் குத்தகைதாரர் என்றும் அந்த விவரம் தேவையில்லை என்றும் தெரிவித்தார். நான்

VA

கிரைய ஒப்பந்தம் பிறப்பிப்பதற்கு முன்பாக சொத்து தொடர்பாக வில்லங்கச் சான்று எடுத்து பார்த்தேனா என்றால் முதல் பிரதிவாதியே என்னிடம் சொத்தின் பெயரில் கடன் இருப்பதாகவும் அதை நிவர்த்தி செய்துவிட்டு கிரையம் செய்து கொடுப்பதாக தெரிவித்தார். வழக்கு சொத்தை பொறுத்து தேவராஜ் என்பவர் சுவாதீனம் இல்லாத ஒரு அடமானம் பெற்ற விவரம் எனக்கு தெரியும். எனது கணவர் பால் ஆரோக்கியராஜ் குத்தகைக்கு இருப்பதால் அதை நிவர்த்தி செய்துவிட்டு எனக்கு கிரயம் செய்து கொடுப்பதாகத்தான் முதல் பிரதிவாதி தெரிவித்து இருந்தார் என்றால் சரிதான். என் கணவர் முதல் பிரதிவாதிக்கு எப்போது குத்தகையை திரும்ப ஒப்படைத்தார் என்றார் தற்போது வரை சொத்தின் சுவாதீனம் என் கணவர் வசம் தான் இருந்து வருகிறது. நான் தாக்கல் செய்த வழக்கில் கணவர் சுவாதீனத்தை திரும்பிக் கொடுக்காத காரணத்தினால் குத்தகை முடிவுக்கு வராத காரணத்தினால் முதல் பிரதிவாதி எனக்கு கிரையம் செய்து கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டது என்று கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். இன்று வரை எனது கணவர் தான் தாவா சொத்தில் உழவடை செய்து வருகிறார். எனது கணவரிடம் இருந்து வந்த உழவடை பாத்தியத்தை முடித்துக் கொடுக்குமாறு கேட்டு நானும் முதல் பிரதிவாதியோ அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. நான் எனது வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பாக முதல் பிரதிவாதியை நேரில் அணுகி கிரையத்தை முடித்துக் கொடுக்குமாறு கேட்டேனா என்றால் வாய்மொழியாக கேட்டேன். நானும் முதல் பிரதிவாதியும் செய்து கொண்டதாக சொல்வது பதிவு செய்யப்படாத ஒரு ஒப்பந்தம் என்றால் சரிதான். நாங்கள் பதிவு செய்த ஒரு

கிரைய ஒப்பந்தம் பிறப்பித்து இருந்திருந்தால் முதல் பிரதிவாதியால் இரண்டாம் பிரதிவாதிக்கு செய்து கொடுக்கப்பட்ட கிரையம் தெரிய வந்திருக்கும் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் இரண்டாம் பிரதிவாதிக்கு நானும் முதல் பிரதிவாதியும் செய்து கொண்ட கிரைய ஒப்பந்தம் பற்றி எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. அவருக்கு நாங்கள் செய்து கொண்ட கிரைய ஒப்பந்தம் பற்றி நன்கு தெரியும். இரண்டாம் பிரதிவாதி வில்லங்கச் சான்று எடுத்துப் பார்த்தபோது தேவராஜ்க்கு முதல் பிரதிவாதி எழுதிக் கொடுத்த அடமான பத்திரம் பற்றி தெரிய வந்தது என்று சொன்னால் அது பற்றி எனக்கும் தெரியும். இரண்டாம் பிரதிவாதி அரசு வழிகாட்டி மதிப்பின் அடிப்படையில் முதல் பிரதிவாதியிடம் இருந்து தகுந்த மறு பயன் செலுத்தி கிரையம் பெற்று இருக்கிறார் என்று சொன்னால் சரியல்ல. இரண்டாம் பிரதிவாதியின் கிரைய பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. அது முறையாக பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்பதால் அதை ரத்து செய்வதற்கு எந்த வித முகாந்திரமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கிரைய ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு விருப்பமும் தயாராகவும் இருந்து வந்தேன் என்பதை முதல் பிரதிவாதிக்கு தெரியப்படுத்தவில்லை என்றும், கிரைய பாக்கித் தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இரண்டாம் பிரதிவாதிக்கு நான் என் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பிற்கு அவர் முறையாக பதில் அறிவிப்பு அனுப்பி இருக்கிறார் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் என் கணவர் தாவா

AVAdocs

சொத்தில் குத்தகைதாரர் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. நான் துர்லாபம் அடைய வேண்டும் என்ற காரணத்திற்காக பல உண்மைகளை மறைத்து வழக்கை தாக்கல் செய்து இருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் செலுத்தி இருக்கக்கூடிய நீதிமன்ற முத்திரை கட்டணம் தவறானது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் நானோ என் கணவரோ எந்த காலத்திலும் உழவடை பாத்தியத்தில் அனுபவத்திலோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தானது இரண்டாம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்பதை தெரிந்து கொண்ட பிறகு ஆறு மாத காலம் கழித்து வழக்கை காலதாமதமாக தாக்கல் செய்து இருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் பிரதிவாதியுடன் செய்து கொண்ட கிரைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் அந்த ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு எந்த காலத்திலும் தயாராக இருந்தது கிடையாது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் ஒருகால் நீதிமன்றம் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வழங்க மறுத்தால் மாற்று பரிகாரமாக கிரைய ஒப்பந்தத்தில் கண்ட தொகையை 18 சதவீத வட்டியுடன் திருப்பி செலுத்த வேண்டும் என்று பரிகாரம் கேட்டு இருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். நான் கேட்டிருக்கும் பரிகாரத்திற்கும், இரண்டாம் பிரதிவாதிக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. நான் எந்த சூழ்நிலையிலும் கிரைய ஒப்பந்தத்தை நிறைவேற்ற தயாராக இருந்தது கிடையாது என்றால் சரியல்ல. நான் கேட்டிருக்கக்கூடிய பற்றுகை பரிகாரம் இரண்டாம் பிரதிவாதிக்கு எதிராக கிடைக்கத்தக்கதாக இல்லை என்று சொன்னால்

சரியல்ல. நான் கேட்டிருக்கக்கூடிய எந்த பரிகாரமும் இரண்டாம் பிரதிவாதியை பொறுத்து எனக்கு கிடைக்கத் தக்கதாக இல்லை என்றும், இரண்டாம் பிரதிவாதி ஒரு நல்லெண்ண கிரையதாரர் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கானது இரண்டாம் பிரதிவாதிக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:-</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Advocate